# இலங்கை வங்கி

**இலங்கையின் 1ஆம் தர வங்கியுடன் இணைந்து உங்களுடைய சட்டத்துறை எதிர்காலத்தைக் கட்டியெழுப்புங்கள்!**

இலங்கை வங்கியின் சட்டப் பிரிவில் தமது எதிர்காலத்தைக் கட்டமைத்துக்கொள்ள விரும்பும் தகைமையும் இளமைத் துடிப்பும் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பும் கொண்ட நபர்களிடமிருந்து பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

# உதவிச் சட்ட உத்தியோகத்தர் பயிலுநர்

**(விசேடமாக அநுராதபுரம், பொலன்னறுவை, கேகாலை ஆகிய பிரதேசங்களில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன)**

## முக்கிய பொறுப்புகள்

- அசையாச் சொத்துகளின் உரித்துறுதிகளைப் பரீட்சித்தல்
- ஈட்டுமுறிகள் மற்றும் ஏனைய தொடர்புபட்ட உறுதிகள், ஆவணங்கள் என்பவற்றை வரைதலும் அத்தாட்சிப்படுத்துதலும்
- சட்டத் தத்துவங்களின் அடிப்படையில் அறிவுரைகளையும் அபிப்பிராயங்களையும் வழங்குதல்
- வழக்கு விடயங்களின் பொருட்டு நீதிமன்றங்களில் தோன்றுதல், முறைப்பாடுகள், பிரேரணைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களை வரைதல்.

## தகுதிப் பிரமாணங்கள்

- **இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்**
- **தகைமைகள்**

  ஆங்கில மொழியில் பணியாற்றும் உரிமம் பெற்ற சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு.
- **அனுபவம்**

  இப்பதவிக்குப் பொருத்தமான துறையில் ஆகக் குறைந்தது 1 ஆண்டு பட்டப்பின் அனுபவம்.

  வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.
- **ஏனைய தகைமைகள்**

  கணினி அறிவும் சிறந்த தொடர்பாடற் திறன்களும்.

  சுயமாக வேலைகளைக் கையாளும் ஆற்றல்.
- **வயது**

  விண்ணப்ப முடிவுத் திகதியில் 32 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

## விதிகளும் நிபந்தனைகளும்

- பயிற்சிக்காலம் 02 ஆண்டுகளாகும். இப்பயிற்சிக் காலத்தில் மாதாந்தக் கொடுப்பனவாக முதலாமாண்டில் 90,000 ரூபாயும் இரண்டாமாண்டில் 100,000 ரூபாயும் வழங்கப்படும்.
- இப்பதவி வழமையான வங்கியியற் சேவைகளுக்குப் புறம்பானது (மூடிய சேவை) என்றபோதும் வங்கியின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- பயிற்சிக் காலத்தின் முடிவில் வங்கியால் நடாத்தப்படும் விசேட பரீட்சையில் தேறுமிடத்தும் பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையுமிடத்தும் உதவிச் சட்ட உத்தியோகத்தர் பதவியில் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.
- தேவைப்படும் போது வார இறுதி / விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- வங்கியின் தேவைப்பாட்டுக்கு ஏற்ப நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.
- அநுராதபுரம், பொலன்னறுவை, கேகாலை ஆகிய விசேட பகுதிகளுக்குத் தெரிவுசெய்யப்படுவோர் அப்பகுதிகளின் ஆட்சி எல்லைகளுக்கான பிரசித்த நொத்தாரிசு உரிமத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## தெரிவு நடைமுறை

பட்டியற்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர்

## விண்ணப்ப நடைமுறை

விண்ணப்பப் படிவத்தை **www.boc.lk** என்ற எமது இணையதளத்தில் **Careers** என்ற பகுதியினூடாக **2025 பெப்ரவரி 22ம்** திகதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்புவதோடு எதிர்காலத் தொடர்பாடல்களின் பொருட்டு 'விண்ணப்பத் தொடர்பு எண்ணை' கவனமாக வைத்துக்கொள்ளவும்.

மேற்குறித்த முறை தவிர வேறு வழிகளில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

வங்கியின் வலைத்தளத்தின் 'மனிதவள முகாமைத்துவ' பக்கத்தில் *(https://www.boc.lk/hr-management)* உள்ள *'ஆட்சேர்ப்புக்கான தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு அறிவித்தல்'* பகுதியை வாசித்து பதவிக்கு விண்ணப்பிக்கும்போது அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

*Careers* என்ற பகுதியில் காணப்படும் **"விண்ணப்பதாரிக்கான அறிவுறுத்தல்களை"** கவனமாக வாசித்து வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய இணையவழி விண்ணப்பத்தை நிரப்பவும்.

**மனித வளப் பிரிவு**
**இலங்கை வங்கி**
**தலைமை அலுவலகம்**
**கொழும்பு 01**

- *தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.*
- *தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.*
- *நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும் / இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு*
- *வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.*


1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்.
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்